பின்வரும் அறிகுறிகள் இருந்தால், உடனே மருத்துவரை அழையுங்கள்:
- சுவாசிப்பதில் சிரமம்
- கீழ்க்கால் அல்லது பாதத்தில் வீக்கம்
- இரத்தம் கலந்த, கருப்பு நிற அல்லது தார் போன்ற மலம்
- பலவீனம்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்னால்,
- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்பதை உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- தற்போது நீங்கள் வேறு மருந்துகள் ஏதேனும் உட்கொண்டு வந்தால், அதை உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- குறிப்பாக மனஅழுத்தம், இருதய நோய், சளி, தசைத் தளர்வு மருந்துகள், ஆன்டிபயோடிக் மருந்துகள், அல்லது வைட்டமின்கள். இம்மருந்துகளை அமில எதிர்ப்பு மருந்துகளுடன் எடுத்துக் கொள்ளலாம் என்று மருத்துவர் கூறினால், அமில எதிர்ப்பு மருந்துகள் உட்கொண்ட பிறகு 2 மணி நேரம் கழித்து இவற்றை உட்கொள்ளுங்கள்.
- சிறுநீரக நோய் தற்போது, அல்லது இதற்கு முன்பு உங்களைப் பாதித்துள்ளதா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- தற்போது நீங்கள் கர்ப்பமாக இருந்தால், அல்லது கர்ப்பம் தரிக்க திட்டமிட்டால் அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். அமில எதிர்ப்பு மருந்துகளில் உப்பு அதிக அளவில் இருக்கிறது. நீங்கள் சோடியம் குறைந்த உணவுகளை உண்பவர் என்றால் இம்மருந்துகளை எடுப்பதற்குமுன் மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். மருந்தின்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health
National Healthcare Group
SingHealth

காலாவதியான அல்லது இனிமேல் உட்கொள்ளத் தேவைப்படாத மருந்துகளை உடனே வீசிவிடுங்கள்

# நோயாளி தகவல் கையேடு



# அமில எதிர்ப்பு மருந்துகள்

# Antacids

T20R0

மருந்துகளை எப்போதுமே பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாதவாறு வைத்திருக்கவும்

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

அமில எதிர்ப்பு மருந்துகள் நெஞ்சு எரிச்சல், இரைப்பை எரிச்சல் மற்றும் அஜீரணத்தைப் போக்கக்கூடியவை. இரைப்பை அல்லது முன்சிறுகுடல் புண்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

இந்த மருந்தை வேறு சில நோய்களுக்கும் பயன்படுத்தலாம். மேல் விவரங்களுக்கு, உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரைக் கேளுங்கள்.

| மருந்து | செயல் |
|---|---|
| • மெக்னீசியம் கார்பொனேட் (Magnesium carbonate)<br>• மெக்னீசியம் ட்ரைசிலிகேட் (Magnesium trisilicate)<br>• அலுமினியம் ஹைட்ராக்ஸைடு (Aluminium hydroxide)<br>• சோடியம் பைகார்பொனேட் (Sodium bicarbonate)<br>• கால்சியம் கார்பொனேட் (Calcium carbonate) | இரைப்பையில் அதிகமாகச் சுரக்கும் அமிலத்தின் காரத்தை இவை நடுநிலைப்படுத்துகின்றன |

* அமில எதிர்ப்பு மருந்துகளில் பெரும்பாலானவை கலவை மருந்துகள். இவற்றில் கடைகளில் சாதாரணமாகக் கிடைப்பவை : மைலன்டா (Mylanta®), காவிஸ்கான் (Gaviscon®), மியூகைய்ன் (Mucaine®) மற்றும் ஜெலுசில் (Gelusil®)

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

அமில எதிர்ப்பு மருந்து, மெல்லக்கூடிய மாத்திரையாகவோ அல்லது குடிக்கக்கூடிய திரவமாகவோ கிடைக்கிறது. மாத்திரை என்றால், அதை சிறிது நேரத்திற்கு நன்றாக மெல்ல வேண்டும், அதை அப்படியே விழுங்கக் கூடாது. மாத்திரையை நன்கு மென்று விழுங்கிய பிறகு ஒரு குவளை தண்ணீர் அருந்த வேண்டும்.
திரவ மருந்து என்றால், ஒவ்வொரு முறையும் மருந்து குடிப்பதற்கு முன்பாக போத்தலை நன்கு குலுக்குங்கள். அப்போதுதான் மருந்து சீராக கலந்திருக்கும்.

பொதுவாகவே, அமில எதிர்ப்பு மருந்துகள் உட்கொண்ட 1-2 மணி நேரத்திற்குள் வேறு மாத்திரைகளோ அல்லது உணவோ உட்கொள்ளக் கூடாது.



நோயாளி தகவல் கையேடு I **அமில எதிர்ப்புமருந்துகள்**

மருந்துப் பொட்டலத்தின் அட்டையில் காணப்படும் மருந்து விவரக் குறிப்பை, அல்லது மருத்துவர் எழுதிக் கொடுத்ததை கவனமாகப் பின்பற்றுங்கள். மருந்தைச் சரியாக எடுக்கத் தெரியவில்லை என்றால், உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

மருத்துவர் கூறினாலன்றி, அமில எதிர்ப்பு மருந்துகளை 1-2 வாரங்களுக்குமேல் உட்கொள்ளாதீர்கள். பிரச்னை வெகு நாட்களுக்கு நீடித்தால் மேலும் தீவிரமான மருந்துகள் உங்களுக்கு தேவைப்படலாம்.

## மருந்து உட்கொள்ள நான் **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

இம்மருந்துகளை நீங்கள் முறையாக எடுத்துவரும்போது, ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்துகள் ஏற்படுத்தக்கூடிய **பக்க- விளைவுகள்** யாவை?

பக்க- விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. பக்க- விளைவுகள் முதலில் இருந்தாலும் மருந்துக்கு உடல் பழகிக் கொண்டுவரும்போது அவை பொதுவாக மறைந்துவிடும். எனினும், கீழ்க்காணும் பக்க-விளைவுகள் நீடித்தாலோ அல்லது தொந்தரவு கொடுத்தாலோ, மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

| மருந்துகள் | பக்க-விளைவுகள் |
|---|---|
| மெக்னீசியம் கார்பொனேட்<br>மெக்னீசியம் ட்ரைசிலிகேட்<br>அலுமினியம் ஹைட்ராக்ஸைடு<br>சோடியம் பைகார்பொனேட்<br>கால்சியம் கார்பொனேட் | வயிற்றுப்போக்கு (மெக்னீசிய அமில எதிர்ப்பு மருந்துகளுக்கு)<br>மலச்சிக்கல் (அலுமினியஅமில எதிர்ப்பு மருந்துகளுக்கு)<br>பசியின்மை |

இம்மருந்துகளை எடுக்கும்போது வழக்கத்திற்கு மாறான வேறு பக்க-விளைவுகள் ஏற்பட்டால், மருத்துவரை உடனே பாருங்கள்.